க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி- திருக்குவளை, நாகை மாவட்டம் - 610 204.
தொடர்புக்கு... 7598868760, 9524302724.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2014
# பத்தாம் வகுப்பு தமிழ் முதல் தாள் - விடைக்குறிப்புகள்

## பிரிவு - I

**பகுதி - 1 :**

| | | |
|---|---|---|
| 01. ஆ. சேர | 02. இ. சடையப்ப வள்ளல் | 03. ஆ. பெரியபுராணம் |
| 04. இ. தேவாரம் | 05. ஆ. உலவு | 06. ஆ. இராமலிங்கர் |

**பகுதி - 2 :**

| | | |
|---|---|---|
| 07. திருவாதவூர் | 08. பன்னிரண்டு அடி | 09. வரப்புகளாக |
| 10. நகர்த்தும் வண்டியில் | 11. பொருளியல் | 12. தால்சுதாய் |

**பகுதி - 3 :**

13. தேவாரம் - திருநாவுக்கரசர்
14. சீறாப்புராணம் - உமறுப்புலவர்
15. கலித்தொகை - நல்லந்துவனார்
16. பூத்தது மானுடம் - சாலை இளந்திரையன்

**பகுதி - 4 :** (17 முதல் 20 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம்)

17. பேச்சின் முக்கூறுகள் யாவை?
18. பெரியார் எவற்றை ஏற்க மறுத்தார்?
19. செம்மொழிக்கு இலக்கணம் வகுத்தது யார்? (அ) பரிதிமாற் கலைஞர் எம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்?
20. இடைநிலை ஆசிரியர் கல்விப் பயிற்சி எத்தனை ஆண்டுகள்?

## பிரிவு - II - பகுதி - 1

21. × ஒழுக்கம் × அது ஒருவனுக்கு அனைத்துச் சிறப்புகளையும் தருகிறது.
22. பணிவு, ஒழுக்கம், சான்றோர் அறிவுரையைப் பின்பற்றுதல், நல்ல நூல்களைப் படித்து அதன்படி நடத்தல்
23. களவு, காமம், பொய், சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்; வளமிகு இல்லற வாழ்வினர்.
24. இராமபிரானோடு தங்கி அவருக்கு வேண்டிய தொண்டினை செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதே குகனின் வேண்டுகோள் ஆகும்.
25. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
26. × எவர்க்கும் ஆட்படாதவன் × அழகிய வெண்சங்கினை காதில் குழையாக அணிந்தவன்
27. நந்திவர்மனின் தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்காத அறிவில்லாத அரசர், தேவர் உலகத்தை ஆள்பவர் ஆவர்.

## பகுதி - 2

28. இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளை தொல்காப்பியம் கூறுகிறது என்று எமினோ கூறுகிறார்.
29. ஒரு மொழிப் படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைத்தல் ஆகும்.
30. ஞால் என்பதற்குத் தொங்குதல் என்று பொருள். எவ்விதப் பற்றுக்கோடுமின்றி அண்ட வெளியில் உலகம் தொங்குவதால் ஞாலம் என்று அழைக்கப்படுகின்றது.
31. × பஃறுளி ஆறு × குமரி மலை

32. × தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை
× தீமை செய்தவர்க்கும் நன்மையே செய், உண்மைப் பொருண்மை உண்டு

33. சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தவர்க்கெல்லாம் உணவிட்டார்.

34. × உயிரி-தொழில் நுட்பத்துறை × நுண்ணியல் தொழில் நுட்பத்துறை

## பிரிவு – III – பகுதி – 1

35. பல்வேறு துறை நூல்களை யாவரும் படிக்கும் வண்ணம் தமிழில் வெளியிடவேண்டும்.
தமிழறிவை மதங்களில் சாய்க்கக் கூடாது
ஊர்தோறும் இலவச நூல்நிலையங்களை ஏற்படுத்துதல் வேண்டும்.
தமிழின் பெருமைகளைக் கூறுவதில் காலம் கழிக்காமல், குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைக்க வேண்டும்.
உலகின் ஒளிமிக்க தமிழ் மொழியை வளர்க்க வேண்டும்.

36. அரசனால் சிறப்பு அடைவது, யானை, தேர், குதிரையில் அரசர் முன் செல்வது செல்வமன்று.
அது அவரவர் முன்வினைப் பயன் மட்டுமே.
புகலிடம் வந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வம் எனச் சான்றோர் கூறுகின்றனர்.

37. செடியின் இலட்சியம், நல்ல பூவினைத் தோற்றுவித்தல். அப்பூவினை வெளிப்படுத்தும் வரை அச்செடி இளைப்பாறுவதில்லை. அது போல, இலட்சியத்தை நெருங்கும் வரை, இடையில் ஏற்படும் இடையூறுகளையோ, தடைகளையோ கண்டு தயக்கம் காட்டக் கூடாது. இளைப்பாற எண்ணி நேரத்தை வீணாக்கக் கூடாது. இவற்றையெல்லாம் தவிர்த்து, தொய்வின்றித் தொடர்ந்து முயன்றால் சாதனைப் பூக்களை அடைய முடியும் என்று சாலை. இளந்திரையன் கூறுகிறார்

38. சீறாப்புராணம் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றை எடுத்தியம்புகிறது.
சீறா - வாழ்க்கை, புராணம் - வரலாறு எனப் பொருள்படும்.
விலாதத்துக் காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜிரத்துக் காண்டம் என முப்பெரும் பிரிவுகளை உடையது.
5027 விருத்தப்பாக்களைக் கொண்டது.
உமறுப்புலவர் இதன் ஆசிரியர் ஆவார்.

39. இவன் (குகன்) நம்மிடத்து நீங்காத அன்புடையவன். எல்லாவற்றினும் இனிய அன்புடைய நண்பனே! இவ்விடத்தில் எம்மொடு இருப்பாயாக! என்று குகனைப் பற்றி இராமன் கூறினார்.

## பகுதி – 2

40. பேச்சின் தொடக்கம் நன்றாக இருக்க வேண்டும்
அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேச்சைத் தொடங்க வேண்டும்
பேசத் தொடங்கிய ஓரிரு மணித் துளிகளில் பேசப் போகும் பொருளில் புகுந்து விடுதல் நல்லது.
தட்டுத் தடங்கலின்றிப் பேச தொடக்கமே அடித்தளமாகும்
கேட்போரைத் தன்வயப்படுத்தும் முறையில் தொடங்க வேண்டும்.

41. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை.
சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான் இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும்
தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடாக இல்லாமல் பந்தயக் குதிரைகளாக மாற வேண்டும்.
தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளர வேண்டும்.

42. 1946ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்
அம்பேத்கரின் அரிய முயற்சியால் மும்பையில் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

43. கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப்பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன. கிறித்துபிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில் தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தமிழர்களுக்கு சாவக நாட்டுடனும் கடல் வாணிகத் தொடர்பு இருந்தது.

44. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் அரிச்சந்திரன் நாடகம்.
உண்மையையே பேசும் அரசன் அரிச்சந்திரனைப் பொய் பேச வைக்க விசுவாமித்திர முனிவர் பல இன்னல்களை உருவாக்குகிறார். இதனால் அரிச்சந்திரன் நாட்டையும் மனைவியையும் ஒரே மகனையும் இழக்கிறார். சுடுகாட்டில் பணிபுரிகிறார். முனிவர் பல்வேறு இன்னல்களை இழைத்தும் பொய் சொல்லேன் என்று மறுமொழி கூறினார் அரிச்சந்திரன்.
அவரது வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தி, தாமும் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என்று உறுதி பூண்டார்.

## பிரிவு – IV

45. அ. கலித்தொகை    ஆ. நல்லந்துவனார்
இ. அறிவெனப்படுவது அறிவிலார் சொல் பொறுத்தல்    ஈ. நீதிமுறையெனப்படுவது ஒருபால் கோடாமை
உ. பொறை - பொறுமை

46. **அ. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள் ஆகும்**
**ஆ. தொழிற்கல்வி கல்லூரிகளில் மாணவர்கள் கலந்தாய்வு மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.**
**இ. தொழிற்கல்வி படித்து முடித்தவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரிய வாய்ப்புண்டு.**
**ஈ. உயிரி - தொழில் நுட்பத் துறை, நுண்ணியல் தொழில் நுட்பத்துறை**
**உ. தொழிற்கல்வி / பல்துறை வேலை வாய்ப்புகள்**

## பிரிவு – V பகுதி – 1

**47.** அ. குறிப்புகள் : இராமன் இலக்குவனிடம் குகனை அழைத்துவருதல் - குகன் பணிதல் - குகனை இராமன் பாராட்டல் - குகனின் வேண்டுகோள் - இராமன் அனுமதியளித்தல் - குகன் படகைச் செலுத்துதல் - குகன் உடன் வருவதாக கூறிய போது இராமனின் கூற்று.

ஆ. குறிப்புகள்: பெரியாரைத் துணைக்கோடல் - பெரியாரது இலக்கணம் - அவரைத் துணையாகக் கொள்ளுதலின் தேவை - பெரியாரைத் துணைகொள்வதன் சிறப்பு - பெரியாரைத் துணைக்கோடலின் பயன் - பெரியாரைத் துணை கொள்ளாததனால் ஏற்படும் குற்றங்கள்

**48.** அ. குறிப்புகள் : முன்னுரை - அம்பேத்கர் சிறந்த இலட்சியவாதி - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் - சுயேச்சையாக நடமாடும் உரிமை - எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துதல் - மனித நேயம் - முடிவுரை

ஆ. குறிப்புகள்: தமிழன் அறிவியலின் முன்னோடி முன்னுரை - விண்ணியலறிவு - பொறியியல் அறிவு - கனிமவியல் அறிவு - மண்ணியல் அறிவு - அணுவியல் அறிவு - நீரியல்அறிவு - மருத்துவ அறிவு - முடிவுரை

## பகுதி – 2

49. அ. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

ஆ. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல்

இ. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்.

தொடர்புக்கு... 7598868760, 9524302724, srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி– திருக்குவளை, நாகை மாவட்டம் – 610 204.
தொடர்புக்கு... 7598868760, 9524302724.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2014
# பத்தாம் வகுப்பு தமிழ் இரண்டாம் தாள் - விடைக்குறிப்புகள்

**பிரிவு – 1 – பகுதி – 1**

01. ஆ. இரட்டைக்கிளவி    02. இ. 8    03. அ. ஆண்மகனின் ஒழுகலாறுகள்
04. ஆ. 4    05. இ. சொற்பொருள் பின்வரு நிலையணி

**பகுதி – 2**

06. ஐகாரக்குறுக்கம்    07. ஈ + கால் = ஈக்கால் (வேறு பல விடைகளும் உள்ளன)
08. மலையும் மலை சார்ந்த இடமும்    09. போல    10. திசைப் பெயர்ப்புணர்ச்சி

**பகுதி – 3**

11. தேன்மொழி திருக்குறள் **கற்றாள்**    (கற்பித்தாள் - கற்றாள்)
12. மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்
13. வேல்விழி திருக்குற**ளைப்** படித்தாள்    ( ஐ - வேற்றுமை உருபு)
14. ஆசிரியர் கற்பித்த இலக்கணம் **பசுமரத்தாணி போல** மனதில் பதிந்தது.(வேறு பல தொடர்களும் எழுதலாம்)
15. ஆறு - எண், நதி
16. ஓர் எழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும். எ.கா. கை + தடி = கைத்தடி (வேறு பல விடைகளும் உள்ளன)
17. எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம் இதனைப் ‘பயவாக் களரனையர் கல்லாதவர்’ என்பார் திருவள்ளுவர்.
18. நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள்.
19. பொருத்துக:    காகம்    -    கரையும்
    குயில்    -    கூவும்
20. தமிழகத்தில் எண்ணற்ற தொழில் நுட்பப் பயிலகங்கள் உள்ள**ன**.

**பிரிவு – 2 – பகுதி – 1**

21. புகுக    =    புகு + க
    புகு    -    பகுதி,
    க    -    வியங்கோள் வினைமுற்று விகுதி
22. மொழி மூன்று வகைப்படும். அவை: தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி.
23. இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இரட்டைக்கிளவி எனப்படும். இச்சொற்கள் இரட்டித்தே வரும்; பிரித்தால் பொருள் தராது. எ.கா. பாவை, படபடவெனப் பேசினாள்.
24. ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது, ஒரு பொருட்பன்மொழியாகும். எ.கா. நடுமையம்
25. நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றி, இயல்பாகச் சேர்வது இயல்புப் புணர்ச்சி எனப்படும். எ.கா. பொன் + வளையல் = பொன்வளையல்
26. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் :    தெய்வம் - திருமால்,    மக்கள் - ஆயர், ஆய்ச்சியர்
    விலங்கு - முயல், மான், புலி
    பண் - முல்லைப்பண், யாழ் - முல்லையாழ்.

(வேறு பல விடைகளும் தரலாம்)

27. வெட்சித்திணை - ஆநிரைகளைக் (பசுக்கூட்டங்களை) கவர்தல், வெட்சிப் பூச்சூடிச் செல்வார்கள் .
    கரந்தைத் திணை - கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரைகளை மீட்டல். கரந்தைப் பூவைச் சூடிச் செல்வார்கள்

## பிரிவு – 3 – பகுதி – 1

28. ஆசிரியப்பாவின் இலக்கணம்:

1. அளவடிகளைப் (நான்கு சீர்) பெற்று வரும்
2. இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்) பயின்று வரும். பிற சீரும் வரும். ஆனால், வஞ்சியுரிச்சீர்கள் வாரா.
3. ஆசிரியத் தளைகள் பயின்று வரும். பிற தளைகள் கலந்தும் வரும்.
4. மூன்றடிச் சிற்றெல்லையும், பாடும் புலவனின் மனக்கருத்திற்கேற்பப் பல அடிகளைப் பெற்றும் வரும்
5. அகவலோசை பெற்று வரும்
6. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

29. இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி சொல் பின்வருநிலையணி.

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல் பின்வருநிலையணி..

இக்குறட்பாவில் துப்பு என்னும் ஒரே சொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல் பின்வருநிலையணி ஆகும். (அல்லது)

**அணி இலக்கணம்:** உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும்.

**சான்று:** பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

**விளக்கம்:** இக்குறட்பாவில் மென்மையான மயில் தோகையே ஆயினும், அதனை அளவுக்கு அதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்து விடும் என்பது உவமை.

பகைவர்கள் தனித்தனியே நோக்கும்போது மிக எளியோராயினும் ஒன்று கூடினால், தனிப்பட்ட பகை மன்னன் எவ்வளவு வலிமை உடையவனாயினும் அவனை எளிதில் வென்றுவிடுவர் என்பது, இதனால் பெறப்படும் பொருள். எனவே, இது பிறிதுமொழிதல் அணியாகும்.

30.

| | | | | |
|---|---|---|---|---|
| நன்/றிக்/கு | - | நேர் நேர் நேர் | - | தேமாங்காய் |
| வித் / தா / கும் | - | நேர் நேர் நேர் | - | தேமாங்காய் |
| நல் / லொழுக் / கம் | - | நேர் நிரை நேர் | - | கூவிளங்காய் |
| தீ / லொழுக் / கம் | - | நேர் நிரை நேர் | - | கூவிளங்காய் |
| என் / றும் | - | நேர் நேர் | - | தேமா |
| இடும் / பை | - | நிரை நேர் | - | புளிமா |
| தரும் | - | நிரை | - | மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்தது. |

## பகுதி – 2

31. பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப்பற்று - தமிழ்த்துறைப் பணியை விரும்பி ஏற்றல் - தம் இல்லத்தில் மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார் - இயற்றமிழ் மாணவர் எனப் பெயரிட்டார் - சி.வை.தாமோதரனார் திராவிட சாஸ்திரி எனப் போற்றினார் - ஆங்கிலக் கவிஞர் ஆர்தர் எழுதிய பாடலுக்கு முன்னதாகவே கம்பர் எழுதிய விடுநனி கடிது பாடல் - பேராசிரியரிடம் விளக்கம் - சூரிய நாராயணசாஸ்திரி என்ற தன் பெயரை பரிதிமாற் கலைஞர் என மாற்றினார் - மணிப்பிரவாளநடை எரிச்சல் தரும் என்பதால் வடசொற்கலப்பைக் கண்டித்தார்.

32. குறட்டை ஒலி - முன்னுரை - மு.வ. அவர்கள் கதைகள் மனித வாழ்வைச் சித்தரிப்பன - கதாபத்திரங்கள் - வடபகுதியார் - செல்வந்தர் - குழந்தை இல்லை - அமைதியான வீடு - தென்பகுதியார் - ஏழை - வீட்டில் நாய் - ஐந்து குட்டிகள் - தாய் நாய் காணாமல் போனது - குட்டி நாய் கத்துதல் - ஏழைத்தாய் குட்டிக்கு பாலூட்டுதல் - அன்பே இல்லாத வடபகுதியில் ஏப்பஒலி மாறி, குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது.

33. தமிழகத்தில் நூலகத் துறை - முன்னுரை - ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் - நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ் - இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் 1948 ஆம் ஆண்டு சென்னைப் பொது நூலகச் சட்டம் - பள்ளிகளில் நூலகம் - புத்தகப் பூங்கொத்துத் திட்டம் - நூலகமும் பயன்பாடும் - தமிழகத்தில் உள்ள சிறப்பான நூலகங்கள் - முடிவுரை.

## பகுதி – 3

34 அ. அப்பா, வர்ற ஞாயிற்றுக்கிழமை எனக்குப் பிறந்த நாள். நீங்க இன்னும் எனக்குப் பிறந்த நாள் உடை எடுக்கவில்லையே, ஏன் அப்பா? என்னோட நண்பர்களையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லி அழைத்திருக்கிறேன்.

**ஆ. 6 - சு, 15 - கரு, 51 - ருக, 60 - சுO**

35. அ. இது கணினி காலம். இவை அன்றாட வாழ்வின் ஒரு முக்கிய பகுதியாகி வளர்ந்து வருகிறது. இன்றைய கால கட்டத்தில் வணிகம், நிறுவனம், தொழிற்சாலைகள், அமைப்புகள் மற்றும் அரசுத் துறைகள் செவ்வனே செயல்பட எண்ணற்ற தகவல் பரிமாற்றம் தேவைப்படுகிறது. கணினி அதிவேகமான தகவல் பரிமாற்றக் கருவியாக விளங்குகிறது.

ஆ. 1) மின்னுவதெல்லாம் பொன்னல்ல 2) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

3) தன் கையே தனக்குதவி 4) முயற்சி திருவினையாக்கும். (நிதானமே பிரதானம்)

## பகுதி – 4

36. பொருத்தமான கதை / கவிதை எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்

## பகுதி – 5

37. திரண்டகருத்து : பல்வேறு துறை நூல்களைப் பிறர் துணையின்று எல்லாரும் படித்து அறிந்து கொள்ளும் வகையில் தமிழில் வெளியிட வேண்டும். தமிழறிவை மதங்களுக்குள் சாய்க்காமை வேண்டும். இலவச நூலகங்களை ஊர்தோறும் ஏற்படுத்துதல் வேண்டும். தமிழின் பெருமைகளைக் கூறுவதிலேயே காலம் கழித்தோம்; குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைத்தோமில்லை உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்ப்போம் வாரீர் என்று தமிழ் மொழியை வளர்த்திட அழைப்பு விடுக்கிறார் புரட்சிக்கவிஞர்.

மையக்கருத்து: தமிழ் மொழியை வளர்ப்பதற்காக வழிகள்

எதுகை நயம்: உலகியலின்

சலசலவென

இலவச

இயைபு நயம்: பாய்ச்சிவிட **வேண்டும்**

சாய்க்காமை **வேண்டும்**

எவ்விடத்தும் **வேண்டும்**

தலைப்பு: தமிழ் வளர்ச்சி

## பகுதி 6: 38 வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம்

வலிவலம் கிளை நாள் 15.12.2014

இடம்: வலிவலம்

சேமிப்பு கணக்கெண் 1158002456758

நிலையான கணக்கெண் .......................................

பெயர் .10215

ரூபாய்.பத்தாயிரம் மட்டும் ரூ. 10,000

காசோலை விவரம்

| காசோலை எண் / நாள் | பெறப்பட்ட வங்கி / கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| - | - | - |

காசாளர் எழுத்தர் / மேற்பார்வையாளர்

வலிவலம் கிளை நாள் 15.12.2014

இடம்: வலிவலம்

சேமிப்பு கணக்கெண்

| 1 | 1 | 5 | 8 | 0 | 0 | 2 | 4 | 5 | 6 | 7 | 5 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

நிலையான கணக்கெண்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

பெயர் 10215

ரூபாய். பத்தாயிரம் மட்டும் ரூ. 10,000

| காசோலை எண் / நாள் | பெறப்பட்ட வங்கி / கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| - | - | - |

பண விவரம்

| தாள் | தொகை |
|---|---|
| 1000 × 10 | 10,0000 |
| 500 × | |
| 100 × | |
| 50 × | |
| 20 × | |
| 10 × | |
| 5 × | |
| காசுகள் | |
| மொத்தம் | 10,0000 |



செலுத்துநர் கையொப்பம்

பகுதி 7:

39. அ. அ. தமிழரசனைப் போல் இருப்பது நல்லது

ஆ. எழிலரசன் முதலில் மற்றவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டும்.

இ. எனக்கு நண்பர்கள் நிறைய பேர் உண்டு.

ஆ. அ. பக்கத்து வீட்டில் உள்ளவர்களைத் துணைக்கு அழைப்பாள்

ஆ. எங்கள் வீட்டில் உள்ள அலைபேசி வழியாக தந்தைக்கு தகவல் தெரிவிப்பேன்.

(மாணவரின் விடை சூழலுக்குக்கேற்ப சரியானதாக இருந்தால் மதிப்பெண் வழங்கலாம் - மாற்று விடைகள் உள்ளன)

40. கடிதம் - அனுப்புதல் - பெறுதல் - பொருள் - கடிதப் பொருள் - முடித்தல் - உறை மேல் முகவரி

41. கட்டுரை - கொடுக்கப்பட்ட உட்தலைப்புகளை ஒட்டி எழுதப்பட்டிருக்கும் கருத்துகளுக்கேற்ப மதிப்பெண் வழங்கலாம். (அருங்காட்சியகம் - துணைப்பாடத்தில் இடம் பெற்ற கருத்துகளை ஒட்டி எழுதலாம்)